செ.வெ.எண். 560 நாள் 06.07.2010

# தமிழ் வளர்ச்சித் துறை

## தமிழறிஞர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம்

## உயர்நிலைக்குழுக் கூட்டம்

## செய்திக் குறிப்பு

தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் தொடர்பான உயர்நிலைக் குழுக் கூட்டம் மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.க. பொன்முடி அவர்களின் தலைமையில் 6.7.2010 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் எல்லைக்காவலர் 23பேர், எல்லைக்காவலரின் மரபுரிமையர்கள் 15 பேர், தமிழறிஞர்கள் 64 பேர், தமிழறிஞரின் மரபுரிமையர்கள் 147 பேர் என மொத்தம் 249 பேருக்கு உதவித் தொகை வழங்கக் குழு பரிந்துரை செய்துள்ளது.

எல்லைக்காவலருக்கு ரூ.4,000/– எல்லைக்காவலரின் மரபுரிமையர்களுக்கு ரூ.2,000/–, தமிழறிஞர்களுக்கு ரூ.3,000/–, தமிழறிஞர்களின் மரபுரிமையர்களுக்கு ரூ.1,500/– மற்றும் இவர்களுக்கு மருத்துவப்படியாக ரூ.15/–ம் திங்கள்தோறும் 1-7-2010 – முதல் அவர்களின் வாழ்நாள் முழுவதும் இவ்வுதவித்தொகை வழங்க குழு பரிந்துரை செய்துள்ளது.

ஏற்கனவே இத்திட்டத்தின் கீழ் எல்லைக்காவலர்கள் 334 பேர், எல்லைக்காவலர்களின் மரபுரிமையர்கள் 166 பேர், தமிழறிஞர்கள் 999 பேர், தமிழறிஞர்களின் மரபுரிமையர்கள் 528 பேர் என மொத்தம் 2027 பேர் பயனடைந்து வருகிறார்கள். இனி மேற்கண்ட249 பேர்களையும் சேர்த்து மொத்தம் 2,276 பேர்கள் பயன் பெறுவார்கள்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

//